## நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2016

நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலமைக்கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2007 யூலை 17 ஆந் திகதிய நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2007 யூலை 17 ஆந் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவு | ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 01 கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2 (ஆ) பந்தி | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் மிகைகள் ரூபா 6,101,640 மற்றும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதியத்தின் மிகையான ரூபா 3,258,965 தொகை திரட்டிய நிதியத்திற்குச் மாற்றப்பட வேண்டிய போதிலும், அதற்கும் பதிலாக அந்த மிகைப் பணம் முறையே நிதியத்தின் நடைமுறை கணக்கொன்றில் மற்றும் மாதாந்தம் முதிர்வடையுமாறு 03 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,258,944 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,354,321 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,904,623 ஆன அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது. அரசாங்க மானியங்கள் ரூபா 5,000,000 இனால் குறைவடைந்திருந்த போதிலும், உட்கட்டமைப்பு பேணுகை செலவினம் ரூபா 8,769.461 இனால் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 யூலை 17 ஆந் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் மூலம் நிதியம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 1 (A) பிரிவின் பிரகாரம் நீதிமன்ற உத்தியோகபூர்வ இல்லங்கள், பதிவேட்டு அறைகள், வழக்கு பொருட்கள் அறை, நீதிபதிகளின் அறை, பதிவாளர் அலுவலகம், நீதிமன்றத்தினரின் வாசிகசாலை மற்றும் மேற்படி கட்டிடங்களுக்குரிய பொது இடங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பேணுதலும், மேற்படி கட்டிடங்களுக்குரிய தகவல் தொழில்நுட்ப வசதிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வழங்குதலும் பிரதான பணிகளாகும். இந்த பணிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 10,000,000 தொகையான நிதியேற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 3,575,096 தொகை செலவிடப்பட்டு கணனி உபபாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீதி அமைச்சின் நீதிமன்ற நிர்வாக செலவினத் தலைப்பு 228 மற்றும் அதன் பிரதான பணியான நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 1,211,902,087 தொகை செலவிடப்பட்டுள்ள போது, அந்த பணிகளுக்காக நீதி அமைச்சின் செலவினத் தலைப்பு 110 இல் இந்த நிதியத்திற்காக ரூபா 10,000,000 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கை திட்டம்

நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் அது செயற்படுத்தப்பட்டும் இருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.